**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**
**அ.வ.எண்.155/2020**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் நாள் வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1969ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டுப் பிரமாணம் செய்யப்பட்டது.

எனது சாட்சியப் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பழனிச்சாமி | தொழில்: | |
| த/பெ: | நாச்சியப்ப கவுண்டர் | சமயம்: | இந்து |
| முகவரி: | கொல்லப்பட்டி சக்கிலியன் காடு | வயது: | 78 |
| தாலுக்கா: | குமாரபாளையம் | மாவட்டம்: | நாமக்கல் |

18.04.2026
**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணைக்காக நிரூபணப் பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனைப் படித்துப் பார்த்துக் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். இவ்வழக்கில் நான் இன்று தாக்கல் செய்துள்ள கீழ்க்கண்ட ஆவணங்களைக் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 26.08.2019 | வாதி பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரம் | அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 26.11.2019 | வாதி பெயரிலான பிழைதிருத்தல் பத்திரம் | அசல் | வா.சா.ஆ.2 |
| 3 | 18.04.2000 | வாதியின் மனைவி பெயரிலான கிரையப் பத்திரம் | அசல் | வா.சா.ஆ.3 |
| 4 | 09.03.2004 | பாவாயி அம்மாள் பெயரிலான சர்வே எண்.595/18க்கான நத்தம் பட்டா | அசல் | வா.சா.ஆ.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 18.05.2004 | சர்வே எண்.595/19 குறித்த பட்டா மாறுதல் உத்தரவு | அசல் | வா.சா.ஆ.5 |
| 6 | 06.04.2017 | 3ம் பிரதிவாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் | அசல் | வா.சா.ஆ.6 |
| 7 | 29.10.2019 | சர்வே எண்.595/18க்கு வாதி பெயரிலான பட்டா | அசல் | வா.சா.ஆ.7 |
| 8 | 29.10.2019 | சர்வே எண்.595/19க்கு வாதி பெயரிலான கூட்டுப் பட்டா | அசல் | வா.சா.ஆ.8 |
| 9 | 14.02.2000 | பாவாயி அம்மாள் பெயரிலான பட்டா | அசல் | வா.சா.ஆ.9 |
| 10 | – | தாவா மாதிரி வரைபடம் | அசல் | வா.சா.ஆ.10 |
| 11 | 19.10.2005 | 1,2–பிரதிவாதிகள் வெங்கடாஜலத்திற்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் | பதிவு நகல் | வா.சா.ஆ.11 |
| 12 | 28.03.2018 | 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெயரிலான கிரையப் பத்திரம் | இணைய நகல் | வா.சா.ஆ.12 |

**(வாதித் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.)**